

விலை: சதம் 75 ★★

ஈழநாடு

THE EELANADU

மலர் 23 புரட்டாதி 22 ஜுல்ஹஜ் 9 இதழ் 236
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 8 10-1981

'இராணுவத்தினர்' என்று கூறிய சிலர்

காங்கேசன் ரயில் நிலைய ஊழியரைத் தாக்கினராம்!

(மாவிட்டபுரம்)

இராணுவத்தினர் என்று தம்மை அறிமுகம் செய்த சிலர் காங்கேசன்துறை ரயில் நிலைய ரிக்கட் சேகரிப்பாளரை தாக்கியுள்ளனர். காயமடைந்த இந்த ஊழியர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது பற்றிக் கூறப்படுவதாவது:-

கொழும்பிலிருந்து நேற்றுக் காலை யாழ். வந்த தபால் ரயிலில் வந்தவர்களிடம் ரயில் நிலைய வாசலில் டிக்கட்டுகளைச் சேகரித்துக் கொண்டிருந்த ஊழியரான எஸ். பாக்கியராஜா சிவில் உடையில் வந்தவர்களிடமும் டிக்கட்டைக் கேட்டாராம். தாம் இராணுவத்தினர் என்று அவர்கள் கூறியபோது தமக்கு அது பற்றித் தெரியாது என்றும் டிக்கட்டைத் தருமாறு அந்த ஊழியர் கேட்டாராம்.

இதை அடுத்து அவர்கள் இந்த ஊழியரைத் தாக்கிவிட்டுச் சென்றனராம்.

இது குறித்து காங்கேசன் துறைப் பொலிசார் விசாரணை செய்துவருகின்றனர். (இ

எகிப்தில் இராணுவச்சட்டம்:

40 நாள் துக்கம் அறிவிப்பு

அதிபர் சதாத்தின் ஜனாஸா சனியன்று நல்லடக்கம்

கெய்ரோ, அக். 7

எகிப்திய ஜனாதிபதி ஜனாப் அன்வர் சதாத் நேற்று படுகொலை செய்யப்பட்டதையடுத்து எகிப்தில் இராணுவச்சட்டமும் அவசரகாலச்சட்டமும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

பொதுமக்கள் கூட்டமாக வீதிகளில் நடமாடுவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதுடன், முழு அளவிலான தணிக்கையும் அமுல் செய்யப்பட்டுள்ளது. வீடுகள் தோறும் பலத்த சோதனையும் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஜனாப் சதாத்தின் பூதவுடல் சகல அரசாங்க மரியாதைகளுடனும் வரும் சனிக்கிழமை அடக்கம் செய்யப்படுமென்றும் 40 நாட்கள் அரச துக்கம் அனுஷ்டிக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளையில் எகிப்தின் புதிய ஜனாதிபதி தேர்தல் இம்மாதம் 12ம் திகதி திங்கட்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எகிப்தின் தற்போதைய உப ஜனாதிபதி ஜனாப் முபாரக் தேசிய ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக ஜனாதிபதி தேர்தலுக்கு நிறுத்தப்பட்டுள்ளார்.

இக்கட்சியினருக்கே எகிப்தின் தேசிய சட்டசபையில் பெரும்பான்மைப் பலமிருப்பதால் ஜனாப் முபாரக்கே ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார் என கூறப்படுகிறது. எகிப்திய ஜனாதிபதியாக ஒருவர் தெரிவு செய்யப்படுவதற்கு தேசிய சட்டசபையில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெறவேண்டுமென்பது குறிப்பிடத்தக்கது. (வெ)

உலகத் தலைவர்கள் கவலை

கெய்ரோ, அக். 7

எகிப்திய ஜனாதிபதி ஜனாப் அன்வர் சதாத்தின் படுகொலை குறித்து உலகத் தலைவர்கள் பலரும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

றீகன் கண்டனம்

அமெரிக்கா நல்லதொரு நண்பனையும், எகிப்து ராஜதந்திரியொருவரையும், உலகம் ஒரு வீரனையும் இழந்துவிட்டதென்று சதாத்தின் மறைவு குறித்து அனுதாபம் தெரிவித்த அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனல்ட் றீகன் தெரிவித்துள்ளார்.

பெகின் கவலை

இஸ்ரேலிய மக்கள் ஒரு நண்பரையும், கூட்டாளியையும் இழந்துவிட்டனரென்றும் இஸ்ரேல் பிரதமமந்திரி திரு. பெஞச்சம் பெகின் வெளியிட்ட அனுதாபச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

இந்திரா செய்தி

சதாத்தின் மறைவுகுறித்து இந்திய பிரதமமந்திரி திருமதி இந்திரா காந்தி அதிர்ச்சியும், வருத்தமும் தெரிவித்ததுடன், சதாத்தின் குடும்பத்தாருக்கும் தனது அனுதாபத்தை தெரிவித்தார்.

இப்படுகொலைச் சம்பவம் வன்முறையில் செல்லும் மனப்போக்குடையது. இது உலக அழிவுக்கே வழிவகுக்குமென்று திருமதி காந்தி தமது செய்தியில் தெரிவித்துள்ளார்.

பாப்பரசர் விடுத்துள்ளசெய்

6-ம் பக்கம் பார்க்க)

"அரபு மக்கள் மன்றத்தின் மரண தண்டனையே இது"

கடாபி கூறுகிறார்

திரிப்போலி, அக். 7

எகிப்திய அதிபர் ஜனாப் அன்வர் சதாத்துக்கு முன்னர் அரபு மக்கள் மன்றம் விதித்திருந்த மரண தண்டனை தற்போது படுகொலை மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு லிபியத் தலைவர் கேணல் கடாபி தெரிவித்தார்.

எதிர்காலத்தில் சதாத்தின் அடிச்சுவட்டை எவரும் தொடரமாட்டார் என்றும் கேணல் கடாபி தெரிவித்துள்ளார்.

ஜனாப் சதாத்தின் கடைசிக்கால அரசியல் போக்குகளை லிபியத் தலைவர் பலமாகக் கண்டித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

ஈரான் மக்கள் மகிழ்ச்சி கொண்டாடினர்

இதே வேளையில் ஜனாப் சதாத்தின் மறைவுச் செய்தி கேட்டு ஈரானிய மக்கள் மகிழ்ச்சி கொண்டாடினர்.

கியூபா மகிழ்ச்சி

சதாத்தின் படுகொலைச் செய்தி குறித்து அரபு நாடுகளுடன் கியூபாவும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளது.

சதாத்தின் மரணம் குறித்து சோவியத் யூனியன் எதுவித கருத்தும் தெரிவிக்காத போதிலும் படுகொலைச்செய்தியை டாஸ் செய்தி ஸ்தாபனம் நாட்டுமக்களுக்கு அறிவித்தது?

எகிப்தின் முன்னாள் அதிபர்

(6ம் பக்கம் பார்க்க

'அமிர்' தாய்வான் விஜயம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று தாய்வான் பயணமானார். இவருடன் திருமதி அமிர்தலிங்கமும் சென்றுள்ளார்.

மலேசியா, சிங்கப்பூர், இந்தியாவுக்கும் அமிர் தம்பதிகள் விஜயம் செய்வார்கள். புதுடில்லியில் திருமதி இந்திரா காந்தியை திரு. அமிர்தலிங்கம் சந்திப்பார்.

வழிப்பறி

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி காரில் வந்துகொண்டிருந்த இருவரின் லட்சக்கணக்கான ரூபா பெறுமதியுடைய பொருள்கள், ஆயு

(6ம் பக்கம் பார்க்க)

மகாராணி விஜயம்

எதிர்ப்பு நடவடிக்கையில் கூட்டணி ஈடுபடாது

(கொழும்பு)

பிரிட்டிஷ் மகாராணியாரின் இலங்கை விஜயத்தின் போது அவருக்குஅளிக்கப்படவுள்ள வரவேற்புகள் எவற்றிலும் தமிழர் விடுதலைக்கூட்டணி கலந்து கொள்ளாது.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

மகாராணி விஜயத்தின் போது தமிழர் விடுதலைக் கூட்டணி எதுவித எதிர்ப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள மாட்டாது என்றும் திரு. அமிர்தலிங்கம் கூறினார். (உ-இ

ஆயுதமுனையில் மற்றுமொரு ஜீப் கடத்தப்பட்டது!

ரூ. 5,000 பணமும் கொள்ளை

(வவனியா)

வவனியாவில் ஆயுதமுனையில் ஜீப் வண்டியொன்று அபகரிக்கப்பட்டுள்ளது.

ஜீப்பில் சென்று கொண்டிருந்த நபரும் தாக்கப்பட்டதுடன் அவரிடமிருந்த 5000 ரூபாவும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இக்கொள்ளை ஜீப் அபகரிப்பு சம்பவத்தையடுத்து விசேட பொலிஸ் கோஷ்டி தீவிர விசாரணையினையும் தேடுதல்களையும் மேற்கொண்டுவருகின்றது.

சில நாட்களுக்கு முன்னர் கிளிநொச்சியிலுள்ள அரசாங்கப் பண்ணையொன்றிற்குச்சொந்தமான ஜீப் வண்டியென்றும் ஆயுதமுனையில் அபகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பாதிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்கள்

நிவாரணம் வழங்குவதுபற்றி அடுத்த வாரம் விசாரணை

'அமிர்' முயற்சிமீது ஜனாதிபதி நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வன்செயலால் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் வந்துள்ள தமிழ் ஆசிரியர்களுக்கு நிவாரணம் வழங்குவது பற்றி விசாரணைகள் மேற்கொள்வதற்கு கல்விஅமைச்சிலிருந்து தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவர் அடுத்தவாரம் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், இப் பிரச்சினை சம்பந்தமாக ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தியதன்பயனாகவே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. யாழ் கல்வித் திணைக்களத்தில் இவ்வதிகாரி ஒவ்வொரு ஆசிரியரையும் சந்தித்துவிசாரணை நடத்துவார்.

இலங்கை தமிழாசிரியர் சங்கத்தின் கோரிக்கையின் மீதே திரு. அ. அமிர்தலிங்கம் ஜனாதிபதியைச் சந்தித்து மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (மா)

பிக்கு மாணவரும் 'ருகிங்' செய்தாராம்!

கலாநிதி கல்பகே கவலை

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக் கழகத்திற்கு அனுமதிபெற்ற புதிய மாணவர்களை ருக்கிங் செய்வதில் சிரேஷ்ட மாணவர்களுள் ஒருவரான பிக்கு மாணவரும் ஈடுபட்டிருந்தாராம்.

இத்தகைய செய்கை பௌத்த சமயத்திற்கே அவமானம் தரக்கூடியதொன்றென உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி டட்லி கல்பகே கவலை தெரிவித்துள்ளார்.

பல்கலைக் கழகங்களில் ருகிங் துன்புறுத்தல்களைத் தடைசெய்வதுபற்றி அளித்த விளக்கங்களின்போதே, மேற்படி தகவலை கலாநிதி கல்பகே வெளியிட்டார்.

புதிய மாணவர்கள் தமக்குப் பழைய மாணவர்களால் துன்புறுத்தல்கள் ஏதும் ஏற்படுவதாக உபவேந்தரிடமோ, ஏனைய பல்கலைக் கழகத்தின் பொறுப்புவாய்ந்த அதிகாரிகளிடமோ முறைப்பாடு செய்தால் இதுசம்பந்தமாக உடன் விசாரிக்கப்பட்டு தண்டனைக்குள்ளாவோர் உடனடியாக வீடுகளுக்கு அனுப்பப்படுவர் எனத் தெரிவித்துள்ளார். (இ)

திருவள்ளுவர் சாலை

இன்று மாலை 5 மணிக்கு கந்தர்மடத்தில்
யாழ். மாநகரசபைத் தலைவர்
உயர்திரு. ஆர். விசுவநாதன் திறந்துவைப்பார்
சிறுவர்களுக்கான திருக்குறள் வகுப்பும்
யாழ். மகளிர் வாசகி மன்றமும் மாலை 5-30 மணிக்கு
திருமதி இரத்தின நவரத்தினம் அவர்களால்
தொடக்கி வைக்கப்படும்.
புதிய மாணவர்களுக்கும் உறுப்பினருக்கும் திருக்குறள் நூல் இலவசமாக வழங்கப்படும்.

செயலாளர்,
தெய்வீகத் திருக்குறள் மன்றம்,
வள்ளுவர் பணிமனை, கந்தர்மடம். தொலைபேசி: 7211
DIVINE THIRUKKURAL SOCIETY,
Valluvar Mission House, Kandarmadam.

வாழ்த்துகிறோம்
அக்குபங்சர் பயிற்சி நிலையம்,
254, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
லிங்கம் ரெக்ஸ்ரயில்ஸ், கொழும்பு, யாழ்ப்பாணம்.
N வைத்திலிங்கம் & Co Ltd,
188, K K S. வீதி, யாழ்ப்பாணம்
PITCO TEA
லீடர் ரேடேர்ஸ்,
183/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
லீடர் இன்டஸ்ரீஸ், லிமிரட்,
7 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
திருக்குறள் பற்றிய நூல்கள்
236, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(1165)

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. சடு/12675

எலிசபெத் லுடுவிகி, பண்டத்தரிப்பு, தற்போது மானிப்பாய் (கோஸ்றன் ஹவுஸ், மானிப்பாய்)

— வழக்காளி

1. தம்பையா கந்தையாவும் பெண் 2. மகேஸ்வரியும் இருவரும், 59, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
3. நவமித்திரன் குமாரன் பெண் இரத்தினம், 32, கல்யாணி வீதி, கொழும்பு.
4. என் சற்குணலிங்கமும் பெண் 5. சாரதா தேவியும். டேவிட்சன் வீதி, கொழும்பு.
6. அபயசேகர மரிஞ்சிகே பியதாஸ, சந்திரா பேக்கறி, ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம்.
7. பொன்னையா துரைசிங்கமும் பெண் 8. இராஜாம்பாளும் இருவரும், மல்லாகம்.
★ 9. கனகசபை மகள் தவரேசனி C/O டாக்டர் எஸ். சிவராசலிங்கம், அரசாங்க ஆஸ்பத்திரி, திருகோணமலை.
10 கனகசபை மகள் மகாரேசனி இருவரும், வண்ணார்பண்ணை கிழக்கு.
11. புஷ்பலீலா செல்லையா திருமதி தங்கம்மா கனகரத்தினம் மேற்பார்த்து, ராணிஸ்வரன், அச்சுவேலி.

— எதிராளிகள்

மாவட்ட கோடு சடு/12675 இலக்க வழக்கில் எனக்கு கிடைத்த யாழ். கோட்டுக் கட்டளைப்படி பின்னுக்கு விபரிக்கப்படும் காணி 81- கார்த்திகை- இரண்டாம் திகதி திங்கட்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:

முதல் வட்டி ரூ. 32,675/- உம் மேலும் 1971-7-31 தொடக்கம் 1974-5-28 வரைக்கும் ரூபா 20,000/- 9% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் 5% வட்டியையும் கோட்டுச் செலவு 1019/91.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்ட யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கு உறை "நிலகுட்டி மடம்" 28-10 1960ல் உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு. ரி. கந்தையா அவர்களால் தயாரிக்கப்பட்ட 845-ம் இலக்க படத்தின்படி நிலப்பரப்பு 2 குளி 1. 4 கடைகளும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும், தெற்கு எல்லை கிழக்கு மாட்டின் வீதி, வடக்கு வி. தம்பையாவினுடையதும், மேற்கு ஹரோலின் அரசயம் பாட்லெட்டினுடையதும், தெற்கு என். தெய்வேந்திரத்தினுடையதும் இதடங்கலும் அதற்குரியவைகளும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை ஜே. பி.,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்

"சேனபதி",
புத்தூர்,
25-9-81.

[1193]

இதயம் உடைகிறதே!

அறிஞரோர் ஒருபால், அறிவிலிகள் ஒருபால்
அறிவுடமைபேசி, நல் அபிவிருத்தி கோரும்
அறிவாளி தந்தம் வாழ்வினையே பெருக்கி
அறிவாக செய்யும் அறிவிலிகள் ஒருபால்
கொலை கொள்ளை கோரக் கொடுமைகள் எங்கும்
வலை வீசினாலும் வளருதல் கண்டீர்!
கலையென்று இன்று காண்பதெனில் இன்று
கலைபோல் காசு தேடுவதே கலையாம்.

இந்நிலையில் —

சக்திக்குப் பூசை - நல்
பக்திக்குப் பூசை - ஏன்
எத்திக்கும் பூசை - நல்
சக்திதர வேண்டி!
ஏனிதை நான் சொல்ல
என்னிதயம் உடைகிறதே!

- இள—அரி

இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 22-ம் திகதி

வியாழக்கிழமை

[8 - 10 - 81]

மேடம்- வாழ்வில் இன்று வெற்றித்திருநாளாகும். எதிலும் அதிஷ்டம் உங்கள் பக்கமே இருக்கும். புது பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு நன்று.

இடபம்- குழந்தைபொன்றின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத்தரும். இதயத்தில் இன்பம் பொங்கும் உங்கள் முன்னேற்றத்துக்கு ஆதரவுகொடுப்பார்.

மிதுனம்- வட்டமிடும் கழுகுப்பார்வை உங்களை மிரட்டப் பார்க்கும். பிரயாணத்தின் போது பொருள் தழுவக்கூடும். ஆயுதபீடைக்கும் இடமுண்டு. அவதானம்வேண்டும்.

கடகம்- உறவினர்கள் உதவிக்கு வருவர். வாழ்க்கையில் உற்சாகம் ஏற்படும். காதலர்கள் வாழ்வில் கனியான நிகழ்ச்சிகள் இடம்பெறும். குதூகலமான தினம்.

சிங்கம்- எதிர்பாராத வகையில் பொருள் விரயமாகும். சொந்தக்கார் வர்க்கங்களினுள் பிணக்குகள் ஏற்படும். நண்பர்களைப் பகைத்துக்கொள்வீர்கள். வீணான சிந்தனைகளுக்கு இடமளியாது இருக்கவும்.

கன்னி- தக்கசமயத்தில் தந்தையின் ஆதரவு கிடைக்கும். தெய்வநம்பிக்கை மேலிடும். ஸ்தல யாத்திரை ஒன்று மேற்கொள்ளப்படலாம். நினைத்ததைச் சாதிப்பதில் இன்று முன்னணியில் நிற்பீர்கள்.

துலாம்- தொழில்துறையில் நல்ல மாற்றம் ஏற்படும். மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக்கிடைக்கும். நண்பர் மூலம் புதிய தொடர்புகள் ஏற்படும்.

விருச்சிகம்- அதிஷ்டகரமான தினம். சிலர் வாழ்க்கையில் திரவிய இலாபத்துக்கு இடமுண்டு. மணவாழ்வில் மகிழ்ச்சி தென்படும். வீட்டில் சுபகருமமொன்று இடம்பெறும்.

தனு- நடையில் தயக்கம் ஏற்படும். உங்கள் விடயத்தில் இன்று உண்மையும் ஊமையாகிவிடும். உடல் நலம் சிறிது பாதிக்கப்படலாம்.

மகரம்- பிள்ளைகளின் தொல்லைகள் கவலையைத்தரும். பிறருடன் பகைத்துக்கொள்ளவும் நேரிடும். குடும்பத்திலும் சிறிது புயல் வீசும். வெளியிடத் தொடர்புவேண்டும்.

கும்பம்- துண்டிக்கப்பட்ட தொடர்பு மீண்டும் துளிர்விடுவதற்கு இடமுண்டு. இனிமையான பேச்சின்மூலம் எல்லோரையும் கவர்ந்துகொள்வீர்கள்.

மீனம்- ஆசாரக் குறைவுக்கும் அவசரப் போக்குக்கும் இடமுண்டு. இன்று அதிக பேச்சைத் தவிர்த்துக்கொள்ளவும். பூமிப்பிணக்கினுள் வழக்குக்கு இடமேற்படும்.

சோதிட கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

கொக்குவில் இந்து வெற்றி

([illegible])

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் கொக்குவில் இந்துக்கல்லூரி வெற்றியீட்டியது. இப்போட்டி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (உ

பதவி வெற்றிடம்

பனிக்கட்டித் தொழிற்சாலையில் வேலை செய்ய வேலையாட்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பங்கள் பதிவுத்தபால் மூலம் கீழ்க்கண்ட விலாசத்தில் 17-10-81 திகதிக்கும் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

தகைமைகள்: நிடசாத்திரமும் தேக ஆரோக்கியமும் உள்ளவராக இருக்க வேண்டும். (கல்வித் தகைமை அனுபவம் பற்றிய விபரங்களை விண்ணப்பத்தில் குறிப்பிடவும்)

வயது: 25க்கும் 30க்கும் இடையில் இருக்க வேண்டும்.

சம்பளம்: நாட்சம்பள அடிப்படையில் சகல படிகளும் உட்பட நாள் ஒன்றிற்கு ரூபா 18-80 வழங்கப்படும்.

நியமனம்: முதலில் தற்காலிக நியமனமும் ஆறு மாத சேவைக்குப் பின் சேவைத்திறன் அடிப்படையில் நிரந்தர நியமனமும் வழங்கப்படும்.

நற்சான்றிதழ்: அண்மையில் பெற்றுள்ள இரு நற்சான்றிதழ்களும் அனுபவ சான்றிதழ்களும் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி
வடமாகாணம் கடற்றொழிலாளர்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
தபாற்பெட்டி எண் 41, யாழ்ப்பாணம்.

(1164)

வரி விளம்பரம்

தேவை

லேத், பட்டறை, கிறில்கள் செய்வதிலும் எலெக்ரிக் வெல்டிங்கிலும் அனுபவமுள்ளவர் வேலைக்கு தேவை. விண்ணப்பிக்க, விளம்பர இல. 1161, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 1161

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம், இலங்கை.

முதுகலைமாணித் தேர்வு - 1981

மேற்குறித்த தேர்வு 1981-ம் ஆண்டு மார்கழி மாதம் நடைபெறும். இந்தத் தேர்வுக்குத் தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் இதற்குரிய தேர்வுப் பிரவேசப் பத்திரத்தை ஏற்ற முறையில் நிரப்பி 1981-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24-ம் திகதியோ அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக உதவிப் பதிவாளர்/தேர்வுகள் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றனர். தேர்வுப்பிரவேசப் பத்திரங்களைத் தேர்வுக்கிளை உதவிப் பதிவாளரிடம், நேரடியாகவோ அல்லது தபால்மூலமோ பெற்றுக் கொள்ளலாம். தபால்மூலம் தேர்வுப் பிரவேசப்பத்திரங்களைப் பெறவிரும்புவோர் தங்கள் முகவரியிட்டு முத்திரையொட்டப்பட்ட 23X10 செ. மீட்டருக்குக் குறையாத அளவுள்ள கடிதவுறையை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளருக்காக

யாழ்ப்பாணப்
பல்கலைக் கழகம், இலங்கை,
திருநெல்வேலி.
யாழ்ப்பாணம்.
06-10-1981.

1167

வெற்றுச்சாக்கு கேள்வி விளம்பரம்

கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தில் 6000-க்கும் மேற்பட்ட சாக்குகள் கேள்விமூலம் விற்பனைக்கு இருக்கின்றன. ரூபா 25-00 மேற்படி சங்கத்தில் கட்டி கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். சீல் வைத்த கேள்விப்பத்திரங்களாவும் 16-10-81-ந் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன்னதாக பதிவுத்தபால் மூலம் "பதில் பொதுமுகாமையாளர், கட்டைவேலி-நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி" என்னும் முகவரிக்கு அனுப்புதல்வேண்டும். கேள்விப்பத்திரம் அனுப்பும் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வெற்றுச்சாக்குக்கான கேள்வி" எனக் குறிப்பிடுதல்வேண்டும்.

சோ. இராமலிங்கம்
பதில் பொதுமுகாமையாளர்
கட்டைவேலி-நெல்லியடி
ப. நோ. கூ. சங்கம்.

கரவெட்டி.
02-10-81. 1164

கமிட்டி தெரிவு

(மண்டைதீவு)

மண்டைதீவு விவசாய முன்னேற்றச் சங்க அங்கத்தவர்களின் கூட்டம் மண்டைதீவு முன்னாள் கிராம அதிகாரி திரு. மு. நவரட்ணராசா தலைமையில் மண்டைதீவில் நடைபெற்றது. பின்வருவோர் நடப்பாண்டு நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: மு. நவரட்ணராசா, உப-தலைவர்: வெ. அமிர்தலிங்கம், செயலாளர்: ச. பாலசுப்பிரமணியம், துணை செயலாளர்: எஸ். இராமச்சந்திரன், பொருளாளர்: நா. மகாலிங்கமணி. [ந]

மணிவாக்கு

நெற்றி வியர்வை சிந்தும் உண்மை உழைப்பினால் உனது உணவைத் தேடிக்கொள். —பைபிள்

நமது நோக்கு

இன்னுமொரு அரசியற் படுகொலை

அதிர்ச்சியென்னும் சொல்லுக்கு அர்த்தமற்ற வகையில் அடிக்கடி அரசியல் தலைவர்கள் படுகொலைக்குப் பலியாகின்றனர்.

இந்த வரிசையில் இன்று இடம்பெறுகின்றவர் எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத் அவர்கள்.

அண்மையில் பங்களாதேஷ் ஜனாதிபதி கோரக் கொலைக்குப் பலியானதும், அமெரிக்க ஜனாதிபதி றீகனும் பாப்பரசரும் கொலை முயற்சிக்கு ஆளானதும் உலகிலே ஒரு பயங்கரவாதச் சூழ்நிலை உருவாகி வருவதை மக்கள் கவனத்துக்கு புலப்படுத்தும் செயல்களாகும்.

கெய்ரோவில் நடைபெற்ற இப்படுகொலை பயங்கரவாதத்தின் உச்ச நிலையைத் தொட்டுக்காட்டுகின்றது.

எகிப்து, இஸ்ரேல் யுத்தத்தின் எட்டாவது ஆண்டு நிறைவைக் கொண்டாட நடைபெற்ற அணிவகுப்பை மேடையிலிருந்து அவதானித்த ஜனாதிபதி சதாத் துப்பாக்கிக்கு இலக்கானது அரசியல் கொலையில் ஒரு புதிய உத்தியைக் குறிக்கின்றது.

ஜனாதிபதிகளும் சர்வாதிகாரிகளும் ஆழ்ந்த உறக்கத்தை அறியாத வர்க்கத்தினர். எந்தநேரமும் அவ்வுலகத்துக்கு இடமாற்றம் செய்யப்படும் உத்தரவை இயல்பாகவே பெற்றவர்கள்!

இருப்பினும் ஒவ்வொரு சம்பவத்துக்கும் அடிப்படையான காரணம், கருத்து வேறுபாடுகளைக் கற்பிக்கும் தன்மையினால் அவற்றை அறிந்து அதன் பயனை, வரலாற்று ஆசிரியர்கள் மட்டுமல்ல இக்காலத்தில்வாழ்ந்து கொண்டிருக்கும் நாடுகளும், அரசுகளும் சரியாக பிரயோகித்தல் அவசியம்.

எகிப்திய அதிபர் நாஸர் இயற்கை மரணமடைந்த போது இந்த நாட்டிலுமே விடுமுறை மூலம் அவருடைய மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கதிலாமல், கெய்ரோ நகரில் மக்கள் கண்ட சோகக்காட்சிகள் வர்ணிக்க முடியாதவை. சாதாரண ஏழை மக்களின் நண்பனாகவும் ஏகாதிபத்திய நாடுகளின் தீவிர எதிரியாகவும் கீர்த்திபெற்றவர் அவர்.

இன்று கொலைக்கு இலக்கான ஜனாதிபதி பற்றி கிடைத்த முதலாவது செய்திகள் அவருடைய ஆப்த நண்பர்களான அமெரிக்க ஜனாதிபதி றீகனும் இஸ்ரேல் பிரதமர் பெகினும் வழங்கிய புகழுரைகளே! நல்லதொரு நண்பனையும் நல்லதொரு ராஜதந்திரியையும்வீரனையும் இழந்துவிட்டதாக அவர்கள் கூறியிருக்கின்றனர்.

இன்றைய அரசியல் போட்டியில் சரியோ, பிழையோ அரபு நாடுகளுக்கும், சோஷலிச நாடுகளுக்கும் எதிராக இறந்த ஜனாதிபதி தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது பலருக்குத் தெரியும்.

எடுக்கும் நடவடிக்கைகள் எவற்றிலும், ஆற்றலும் துணிவுமுடையவராகையால் நண்பர்களின் தாராளமான புகழுக்கும், எதிரிகளின் காரசார கண்டனத்துக்கும் ஆளானார்.

காம்டேவிட் ஒப்பந்தத்தைப் பல எதிர்ப்புகள் மத்தியில் நிறைவேற்றி மத்திய கிழக்கில் ஒருவிதமான சமாதானமான சூழ்நிலையை ஏற்படுத்த முயன்றதால் சமாதான நோபல் பரிசையும் பெற்றிருந்தார்.

இவ்வித பெருமைகளை வரவிலே பதித்தால் அரபு நாடுகள் இஸ்லாமிய இயக்கங்கள், கிறீஸ்தவ மதத்தினர், அரசியல் எதிரிகள் லட்சக்கணக்கில் மக்கள் ஒடுக்கப்பட்டு வருவதைச் செலவில் பதியவேண்டும். இவ்வர்க்கத்தினர் இவ்வித கொலையைக் கண்டிக்கத் தவறியதோடு அதில் மகிழ்ச்சி காண்பது இன்றைய போரிருள் சூழ்ந்த உலக நிலையைப் பிரதிபலிக்கின்றது.

புதுப் பணம்

"அற்பனுக்குப் பவுசு வந்தால் அர்த்த ராத்திரியில் குடையும் செருப்பும்."

இன்று நாம் இதன் உண்மையை எங்கள் மத்தியில் தினசரி காண்கின்றோம்.

கல்வியறிவுடையவனின் வறுமை பொல்லாதது; ஆனால் அதனிலும் பொல்லாதது கல்வியறிவற்றவனிடம் வந்து சேரும் செல்வம், அது 'செல்வோம், செல்வோமென்று' அந்தரப்படும் போதும், போகும் வரைக்கும் போதிய தீமைகளைச் செய்தே தீரும்.

அண்மையில் நிகழ்ந்த வன்செயல்களின் பின்னணியில் புதுப் பணம் படைத்தவர் காணப்படுவதாக ஜனாதிபதி ஜெயவர்த்தனா கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

பொறுப்புள்ள விசாரணையில் வெளிவந்த கருத்தென்றே நாம் இதனைக் கொள்ளவேண்டும்.

'புதுப்பணம்' ஏற்படுவதற்கு இந்த ஆட்சியில் போதிய வசதிகள் இருப்பதாகவே கருத்துப் புலப்படுகின்றது.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யும் இந்த நன்னாளில் புதுப்பணம் படைத்தவர்களின் அட்டூழியங்களை ஆராய்வது பொருத்தமல்ல.

சமத்துவ சமுதாயத்தை நாடி நிற்கும் ஏழை மக்கள் வாழும் நாட்டில் ஒரு சிலர் பெரும் 'புள்ளிகளாக' 'புளித்த ஏவறை' விட்டுத் திரிவதானால் நாடு தொடர்ந்து வறுமையில் வாடுவதே இதன் விளைவு.

ஆட்சியாளர்கள் தங்களைத் தாமே பரீட்சித்து சமூகத்தின் ஏற்றத் தாழ்வுகளைச் செப்பனிடத் தகுந்த நடவடிக்கைகளில் ஈடுபடுதல் அவசியம்.

தப்பும் வழி வேறெதுவுமில்லை.

உலகலயன்ஸ்சேவைதினம்

உலகத்தின் பலவேறு பாகங்களில் 33,000க்கும் அதிகமான லயன்ஸ் கழகங்கள் இயங்கி வருகின்றன. சேவை மனப்பான்மை கொண்ட இக்கழகங்கள் மனித சமுதாயத்தில் ஒரு முக்கிய பங்கினை எடுத்துள்ளன. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போன்ற சிறந்த குணாதிசயங்களுடன் சர்வதேசரீதியில் முன்னணி நிற்பது லயன்ஸ் கழகங்களாகும்.

மனிதகுலத்திற்கு அரும்பணியாற்றும் இக்கழகங்கள் அக்டோபர் மாதம் 8ம் திகதியை (இன்று) தமது சேவைத்தினமாக உலகெங்கும் கொண்டாடுகின்றன. எத்தேவைக்காக தாம் செயல்படத் தொடங்கினோம் என்பதை நினைவூட்ட மட்டுமன்றி சமூகத்தினருக்கு தமது சேவை சொல்லளவில் மட்டுமன்றி செயலளவிலும் நடைபெறுகின்றதென்பதை வெளிக்காட்டும் சந்தர்ப்பமாக இத்தினத்தை லயன்ஸ் கழகங்கள் கொண்டாடுகின்றன.

க. குணரத்தினம்

(தலைவர் - லயன்ஸ் கழகம் வட்டுக்கோட்டை)

இத்தினத்தில் கழக அங்கத்தவர்கள் ஒன்றிணைந்து முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சியில் பங்குபற்றி தமது அங்கத்தவர்கள் சேவை மனப்பான்மையைக் கூட்டவும் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற முதுமொழிக்கிணங்கக் கழக கட்டுக்கோப்புக்கியைந்து செயலாற்றவும் பொதுசன உறவைப்பலப்படுத்தவும் செயற்படுகின்றனர்.

தமது சேவையை நினைவுறுத்தும் இத்தினத்தில் உலகத்தின் பலவேறு பாகங்களில் இருக்கும் கழக அங்கத்தவர்கள் இரத்ததானம் வழங்கல், வசதியற்றோருக்கு உணவு உடை வழங்கல், வசதியற்றோர் விடுதி, அநாதை இல்லங்கள், சிறுவர் வைத்தியசாலை, முதியோர் இல்லங்கள் ஆகியவற்றிற்கு சென்று அவர்களைச் சந்தித்தல் மரம்நாட்டல், இலவச மருத்துவ ஆலோசனை வழங்கல் போன்ற நற்காரியங்களில் ஈடுபடுவார்கள்.

தமது கழகங்கள் இயங்கும் இடத்தில் இருக்கும் சமூக சேவை மன்றங்கள் சனசமூக நிலையங்கள், இளைஞர் கழகங்கள் ஊராட்சி மன்றங்கள் முத

[6ம் பக்கம் பார்க்க]

தேவியைத் துதிப்போம்

நவராத்திரி ஒன்பது நாளும் தேவியை மூவுருவங்களில் தொழுதபின்னர் பத்தாம்நாள் தசமி நாளும் தொழுகைக்குரியதாயுள்ளது. அது விஜயன் என்னும் அருச்சுனன் பெயரால் விஜயதசமியென வழங்குகிறது. பத்து இரா விழாவை வடநாட்டார் தசரா எனக் கொண்டாடுவர்.

தசமிதினம் மங்கலகரமாகப் பல வைபவங்களுக்குக் குறிக்கப் பெற்றுள்ளது. குழந்தைகளுக்கு வித்தியாரம்பம என்னும் சமஸ்காரம் செய்வதற்கு விதிக்கப்பெற்ற நாள்களில் விஜயதசமி மிக விசேடமானது. வித்தியாரம்பம் ஏடு தொடங்குதலாகும். பனையோலை ஏட்டில் எழுத்தாணியால் எழுதிய அரிச்சுவடியை நல்லவர் பெரியவர் குழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுத்தல் பழையகாலம் முதலாக நிலவி வரும் வழக்கமாகும்.

விஜயதசமி நாளில் பஞ்ச பாண்டவர் பன்னிரண்டாண்டுகள் மறைந்து வாழ்ந்தபின், தாங்கள் வன்னி மரத்தில் மறைத்துவைத்த ஆயுதங்களை எடுத்துக்கொண்டு வெளிப்பட்டார்கள். ஆலயங்களில் ஒன்பது நாளும் கொலுவிருந்த தெய்வத்திருவுருவங்கள் வீதிவழியே குதிரை வாகனத்தில் எழுந்தருளி அயலில் உள்ள வேறோர் ஆலயத்தில் கன்னிவாழை வெட்டுதல் மானம்பு என வழங்குகிறது. இதை மகா நோன்பு என்பர்.

ஒரு காலத்தில் தமிழ் நாட்டையாண்டு பாரதநாடு முழுவதையும் பிறநாட்டார் ஊடுருவலினின்றும் காத்த விஜயநகரமன்னர்களும் மைசூர் மன்னர்களும் விஜயதசமி விழாவை வெகுவிமரிசையாகக் கொண்டாடினர். முற்காலத்தில் மன்னர்கள் விஜயதசமியின்போது வித்துவான்கள் புலவர்களைக் கௌரவித்ததோடு தங்கள் அரண்மனைப் பெருவிழாவில் அரசக்குரிய பல்வேறு அங்கங்களான அரியணை குடை, கொடி, சாமரை, ஆலவட்டம், தேர், யானை, குதிரை முதலியவற்றையும் பூசிப்பர். பின்னர் அரச சின்னங்கள்சூழ வாத்தியங்கள் ஒலிப்பப் பரிவாரங்களோடு உலாப்போந்து வன்னி மரத்துக்குப் பூசை செய்வார்கள். வன்னிமரம் பாவத்தையும் பகைவரையும் போக்கவல்லது. அது துர்க்கையின் அம்சமானது.

சிவசக்தியை நம்முன்னோர் பார்வதி, மகாதேவி, சதீ, கௌரி, மீனாட்சி, காமாட்சி, விசாலாட்சி, அன்னபூரணி, துர்க்கை, காளி, சண்டி முதலிய திருநாமங்களில் வழிபட்டு வந்துள்ளனர். தமிழ்மொழியில் உள்ளவாறே வடமொழியிலும் சக்தியைக் குறித்துப் புலவர்கள் பலர் பாடல்கள் பாடியுள்ளார்கள்.

மூகவி காமாட்சியம்மை மீது ஐந்நூறு சுலோகங்கள் பாடியுள்ளார். சங்கரர் காசி அன்னபூரணி மீதும், மதுரை மீனாட்சி மீதும் பாடியுள்ளார். பாணபட்டர் சண்டி மீது பாடியுள்ளார். அவர் பாடிய நூறு பாடல்கள் சண்டி சதகமெனப் புகழ்பெற்றதாகும்

க. சி. குலரத்தினம்

0 0 0

வள்ளுவன்குறளும் எமது பணியும்

பிரித்தானிய தொல்பொருட்காட்சி நிலையத்தின் நூலகத்திலே, விவிலிய நூலிற்கு அடுத்த படியாக தெரிவு செய்யப்பட்ட [நூல்திருக்குறளாகும். திருக்குறள்] சுமார் எல்லா நாகரீக நாட்டு மொழிகளிலேயும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 26 மொழிகளில் 80 மொழிபெயர்ப்புகளுண்டு. சிங்களத்திலும் 2 மொழிபெயர்ப்புகளுண்டு.

யாழ்ப்பாணத்திலுள்ள தெய்வீகத் திருக்குறள் மன்றம் இன்று தனது ஐந்தாவது ஆண்டைக்கொண்டாடுகிறது.

இம் மன்றம் 12வயதிற்குட்பட்டவர்களுக்கு திருக்குறளை தமிழிலும் ஆங்கிலத்திலும் கற்பித்து வருகிறது. திருக்குறள் பற்றிய நூல்களும் திருக்குறள் கைப்புத்தகங்களும் தமிழிலும் ஆங்கிலத்திலும் மன்றத்தின் நூலகத்தில் கிடைக்கப்பெறும. இதைத்தவிர சிறுவருக்கும் மாதருக்குமென பிரத்தியேக நூலகசேவையும் நடத்தப்படுகிறது. இங்கு வாராந்த, மாதாந்த சஞ்சிகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

தெய்வீகத் திருக்குறள் மன்றத்தை உருவாக்கிய திரு. என். யோகநாதன் அயராது உழைப்பால் மன்றத் தலைமையகம் அமைந்திருக்கும் வீதி திருவள்ளுவர் சாலை என பெயரிட அங்கீகாரம் தரப்பட்டு இன்று திறப்புவிழா நடக்கவிருக்கிறது. மன்றக் காப்பாளராக இருந்த வணக்கத்துக்குரிய தனிநாயகம் அடிகளார் எடுத்த தீர்மானம் இன்று கைகூடுவதையிட்டு அவருக்கு அஞ்சலி செலுத்துகிறோம்.

டாக்டர் பற்றிக் அந்தோனிப்பிள்ளை

[செயலாளர் தெய்வீகத் திருக்குறள் மன்றம்]

சீ-நேரர்

தவிர்க்க முடியாத காரணங்களினால் சீ-நேரர் கட்டுரை இன்றுவெளிவரவில்லை. நாளை வெளிவரும்.

யாழ். இந்துவின் "நவமலர்"

தேவரும் மூவரும் போற்றி நிற்கும் தேவி பராசக்தியின் திருவருள் வேண்டி இயற்றப்படும் நவராத்திரி வழிபாடு இன்று நாடெல்லாம் கொண்டாடும் பெருவிழாவாக விரிந்துள்ளது.

வருங்காலம் வளமானதாகப் பயன்தரும் தொண்டின் வழிப்பட்ட நல்லவர்களை உருவாக்

[6-ம் பக்கம் பார்க்க]

வல்லிபுரக் கோவிலில் அம்புலன்ஸ் படை

(பண்டத்தரிப்பு)

சென். ஜோன் அம்புலன்ஸ் படைப்பிரிவின் முதல் உதவி சிகிச்சை முகாம் இம் மாதம் 10-ம் திகதி முதல் 14-ம் திகதி வரை சரித்திரப் பிரசித்திபெற்ற பருத்தித்துறை வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு அங்கு இயங்கவுள்ளது.

செல்வச்சந்நிதி ஆலய உற்சவ காலத்தில் இப்படையினர் ஆற்றிய தொண்டிற்கு யாழ். மேலதிக நீதிபதி திரு. கே. ஞானச்சந்திரன் பாராட்டு வழங்கியதுடன் வல்லிபுரக் கோவில் உற்சவத்தின்போதும் முதல் உதவிச் சிகிச்சையும் பொலிசார் இல்லாத வேலை சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவும் வேண்டுமென கேட்டுக் கொண்டதன் பேரில் பத்துப் பேர் கொண்ட ஒரு முதலுதவிக் குழுவை அங்கு அனுப்பி வைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை சென். ஜோன் அம்புலன்ஸ் படைப்பிரிவின் யாழ். மாவட்ட ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி மேற்கொண்டுள்ளார்

மகாராணி விஜயம்

[கப்பலை]

இலங்கைக்கு விஜயம் செய்யும் பிரிட்டிஷ் மகாராணியார் கண்டி பேராதனை ஆகிய இடங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

[6-ம் பக்கம் பார்க்க]

சதாத் சுடப்பட்டபோது ஐவர் பலியானார்கள்!

குண்டுகளும் வீசப்பட்டன!

கெய்ரோ, அக் 7

எகிப்திய ஜனாதிபதி ஜனுப் அன்வர் சதாத் இஸ்ரேலில் யுத்த வெற்றியைக் குறிக்கும் இராணுவ அணிவகுப்பைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தபோது எகிப்திய படைவீரர்களுடன் அணிவகுப்பில் பின்னுக்கவச வாகனங்களில் வந்துகொண்டிருந்த இராணுவத்தினர் ஜனாதிபதி சதாத்தின்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன் சரமாரியாகக் குண்டுகளையும் வீசினார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. அப்பொழுது வெளிநாட்டுத் தூதுவர்களுடன் அணிவகுப்பை பார்வையிட்டுக் கொண்டிருந்த ஜனாதிபதி சதாத் காயமடைந்தமையினால் ஹெலிகொப்டர் மூலம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானார் என அறிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தின்போது இரு வெளிநாட்டவர்கள், ஒரு மெய்ப்பாதுகாவலர், இரண்டு எகிப்தியர்கள் பலியானார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இத்துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தின்போது பலர் காயமடைந்தனர். இவர்களில் எகிப்தின் துணைப்பிரதமமந்திரி, பாதுகாப்பு அமைச்சர், எகிப்திற்கான பெல்ஜியத்தூதுவர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இராணுவ அணிவகுப்பில் எகிப்திய ஜனாதிபதி சதாத்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டபோது அவருடன் அணிவகுப்பில்கலந்துகொண்ட வெளிநாட்டுத் தூதுவர்கள் தமது உயிரைக் காப்பாற்றும் பொருட்டு கீழே பதுங்கியிருந்ததாகவும் சிலர் பயந்து ஓடியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கவசவாகனங்களில் வந்த இராணுவத்தினர்களுக்கும் சதாத்தின் படைவீரர்களுக்குமிடையே துப்பாக்கிப் பிரயோகம் ஒரு மணி நேரம் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வெ)

பதில் ஜனாதிபதியாக சபாநாயகர் நியமனம்

கெய்ரோ, அக் 7

எகிப்திய ஜனாதிபதி ஜனுப் அன்வர் சதாத் நேற்று சுட்டுப் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து எகிப்தின் பதில் ஜனாதிபதியாக தேசிய சட்டசபையின் சபாநாயகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் பதில் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டதை எகிப்தின் உபஜனாதிபதி ஜனுப் முபாரக் எகிப்திய வானொலியிலும் தொலைக்காட்சியிலும் அறிவித்தார்.

எகிப்தின் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக அந்நாட்டின் தேசிய சட்டசபை இன்று கூடுமென்று தெரிவிக்கப்பட்டது.

எகிப்தின் உபஜனாதிபதியாக தற்போது பதவிவகித்துவரும் ஜனுப் முபாரக் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

எகிப்தின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுபவர் அந்நாட்டின் தேசிய சட்டசபையில் மூன்றிலிரண்டு பங்கு ஆதரவைப் பெற வேண்டுமென்பது குறிப்பிடத்தக்கது.

எகிப்தின் ஜனாதிபதியாக ஜனுப் அன்வர் சதாத் 1970ம் ஆண்டு பதவியேற்றிருந்தார்.

1978ம் ஆண்டு காம்ப் டேவிட்டில் எகிப்து-இஸ்ரேல் சமாதான ஒப்பந்தத்தைச் செய்து கொண்டமைக்காக ஜனுப் சதாத்துக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (வெ-இ)

“கொலைக்கு நாங்களே முழுப் பொறுப்பு”

13 இயக்கங்கள் அறிவிப்பு

பெய்ரூட், அக் 7

எகிப்திய அதிபர் ஜனுப் சதாத்தின் கொலைக்குத் தாமே முழுப்பொறுப்பு என 13க்கு மேற்பட்ட இயக்கங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளையில் அரபு விடுதலை முன்னணியே ஜனுப் சதாத்தைக் கொலை செய்தது என பெய்ரூட் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரபு நாடுகளின் துரோகியாம்

பெய்ரூட், அக் 7

“அரபுநாடுகளின் ஒருதுரோகி மறைந்துவிட்டார்” என்று சில அரபுநாடுகள் தெரிவித்துள்ளன.

எகிப்திய அதிபர் ஜனுப் அன்வர் சதாத்தின் படுகொலை குறித்து கருத்துத் தெரிவிக்கையில் லிபியா, சிரியா, ஈராக் ஆகிய நாடுகளும் பாலஸ்தீன விடுதலை இயக்கமுமே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளன.

சக்தி விழா

(சாவகச்சேரி)

மீசாலை தெற்கு விக்னேஸ்வர வித்தியாலய கனிஷ்டபிரிவில் அதிபர் திருமதி ப. பூரணம் தலைமையில் சக்திவிழா நடைபெற்றது.

மீண்டும் கூடும்

(மண்டைதீவு)

மண்டைதீவு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டம் முறைவராக நடைபெறவில்லையென இப்பகுதிப் பொதுமக்களில் சிலர் வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. அ. குணநாயகத்துக்கு முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மீண்டும் மேற்படி சங்கப் பொதுக்கூட்டம் மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாகத் தெரிகிறது. (அ)

ஆடுதிருடியவர் அகப்பட்டார்

(கோண்டாவில்)

ஆடுதிருடிச் சென்றவரை பொதுமக்கள் துரத்திப்பிடித்து சுன்னாகம் பொலிஸில் ஒப்படைத்தனர்.

கோண்டாவில் மேற்கில் இரண்டு ஆடுகளை திருடிவந்த ஒருவர், வீதி அருகில் கட்டிவிட்டுச் சென்றார் என்றும் மறுநாள் உரிமையாளர் வந்து உரிமை கோரியபோது ஆடு திருடியவர் ஓட ஆரம்பித்தாரென்றும், அவரை மக்கள் துரத்திப்பிடித்து பொலிஸில் ஒப்படைத்ததாகவும் தெரியவருகிறது. [ச]

கிராம சேவை அலுவலர் வீட்டில் திருட்டு!

[சுண்டிக்குளி]

கிராமசேவையாளர் ஒருவரின் வீட்டை உடைத்து அங்கிருந்த பல பொருட்கள் களவாடப்பட்டுள்ளதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

மண்டைதீவு கிராம சேவையாளர் திரு. எம். சிறிபாலன் தனது காரியாலய வீடு உடைக்கப்பட்டு அங்கிருந்த பன்னீர் செம்பு, குத்துவிளக்கு போன்ற பொருட்கள் களவாடப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். பொலிசார் புலன் விசாரணை செய்துவருகிறார்கள். (இ)

கூட்டம் ஒத்திவைப்பு

(மண்டைதீவு)

மண்டைதீவு பாவனையாளர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் மண்டைதீவு கிராம சேவகர் திரு. எஸ். சிறிபாலன் தலைமையில் கூடிய போது பல அங்கத்தவர்கள் சமூகம் கொடுக்காத காரணத்தால் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

கைதடி திருட்டு வழக்கு:

‘மிகுதித் துணிகளையும் பொலிசாரிடம் கொடுத்தேன்’

(சாவகச்சேரி)

“எனது ஸ்ருடியோவுக்கு பொலிஸார் வந்த பொழுது நான் வெளியே எனதுபட அலுவலாக சென்றுவிட்டேன். பொலிஸார் வந்து ஒரு படுக்கை விரிப்பை எடுத்துக்கொண்டு எனது தம்பியையும் கூட்டிச் சென்றனர்.”

கைதடி திருட்டு வழக்கில் சாட்சியமளித்த அந்தோனிப்பிள்ளை பாக்கியநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு சாவகச்சேரி ஆரம்ப நீதிமன்றத்தில் நீதிபதி எஸ். யேசுதாசன் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் கைதடி ஆயுர்வேத வைத்தியசாலைக்குச் சொந்தமான படுக்கை விரிப்புகளை திருடியதாக களுவலகே சுனில்விலவன்சா மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் சட்டத்தரணி செ. அம்பிகைபாலன் ஆஜரானார். குறுக்கு விசாரணையில் சாட்சி கூறியதாவது:

“நான் வெளியேபோய் திரும்பியதும் எனக்கு கடையிலேயுள்ள மிகுதித்துணியையும், களவுச்சாமான் என அறிந்ததும், பொலிஸ் நிலையத்திற்குச்சென்று கொடுத்த பொழுது அன்று முழுவதும் என்னையும் பொலிஸ் நிலையத்தில் நிறுத்திவைத்தார்கள்.

படுக்கை விரிப்புக்களை எனது ஸ்ருடியோவுக்கருகே கடைவைத்திருக்கும் கிருஷ்ணர் என்பவரும் எதிரியுமாகக் கொண்டுவந்து என்னிடம் தந்து ரூபா 85 பெற்றுக்கொண்டார்கள். பணத்தைக் கிருஷ்ணர் என்பவரிடமே கொடுத்தேன். அவர்கள் இதை எனக்குக் கொடுக்கும்போது களவுப் பொருள் என்று எனக்குத் தெரியாது.

எஸ். கிருஷ்ணர், அப்துல் சலாம் ஆகியோரின் சாட்சியங்களைப் பதிவு செய்தபின்னர் நீதிபதி எஸ் யேசுதாசன் வழக்கை ஒத்திவைத்தார். [ச]

“ஊனமுற்றவர்களை

தொழில் துறைகளில் ஈடுபடுத்த வேண்டும்”

[புலோலி]

“கிராமங்களில் இருக்கும் ஊனமுற்றவர்களுக்கு ஸ்தாபனங்கள் அமைத்து உதவவேண்டியது எமது முக்கிய கடமையாகும். இதற்கு கிராம மக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்”

இவ்வாறு திக்கம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஊனமுற்றோர் உதவித்திட்ட அங்குரார்ப்பண வைபவத்திற்குத் தலைமைவகித்து உரையாற்றிய சங்கத்தலைவர் திரு. கே. வி. தங்கராசா குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: ஊனமுற்றவர்களின் வாழ்க்கையும் வளம்பெற வேண்டும். அவர்களின் வாழ்க்கை வளம்படுத்தப்படும்போது அவர்களும் நாட்டு அபிவிருத்திப்பணிகளில் பங்கு கொண்டு உழைக்கமுடியும்.

உடல் ஊனம், மனக்குறைபாடு என்பனவற்றால் சமூகத்தில் ஏனையவர்களைப்போல வேலைசெய்யமுடியாத இயலாதவர்களின் எண்ணிக்கைகள் வரவர அதிகரித்துவருகின்றது.

உலக மக்களில் 10 சதவீதமான மக்கள் ஊனமுற்றவர்களாக இருக்கின்றனரென்று புள்ளிவிபரப்படி கணக்கிடப்பட்டுள்ளது. குருடர், செவிடர், கால் முடமானவர்கள் ஆகியோரை அவர்களுக்கேற்ற பல்வேறுபட்ட தொழிற்துறைகளில் ஈடுபடுத்துவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்படவேண்டும்.

இவ்வுதவித்திட்டத்தின் முதலாவது பணியாக திக்கத்தைச் சேர்ந்த கால்ஊனமுற்ற திருமதி தங்கவேலு சுபத்திரையம்மாவுக்கு ஊன்றுகோல்களை திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்த திரு வல்லிபுரம் வழங்கினார். [ச

‘டைனமட் வைத்துப் பிடித்த

900 றாத்தல் மீன்களை பொலிசார் கைப்பற்றினர்!

(மன்னார்)

டைனமெட் வெடிவைத்து பிடிக்கப்பட்ட பெருந்தொகையான மீன்களுடன் காணப்பட்ட லொறி ஒன்றை மன்னார் பொலிசார் கைப்பற்றினர்.

இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின்பேரில் லொறிச் சாரதியான வங்காலையைச் சேர்ந்த எம். ரி. மொறாயஸ் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டார்.

மன்னார் பாலத்தில் வைத்து 900 றாத்தல் டைனமெட்வெடி வைத்து பிடிக்கப்பட்ட மீன்களை லொறியில் வைத்திருந்தார் எனக் கூறப்படுகிறது.

லொறியில் இருந்த மீன்களைப் பரிசோதனை செய்த மன்னார் மாவட்ட வைத்திய அதிகாரி இம்மீன்கள் டைனமெட் வெடிவைத்துப் பிடிக்கப்பட்டது எனத் தெரிவித்தார்.

இச்சம்பவம் பற்றி பொலிசார் புலன் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (கு)

இரு யுவதிகள்

வேலை நீக்கம்பற்றி மன்னார் மா. ச. கேள்வி

(மன்னார்)

மன்னார் பட்டணசபையில் 6 மாதங்கள் கடமையாற்றிய இரு யுவதிகள் வேலைநீக்கம் செய்யப்பட்டதுபற்றி மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபையால் கேள்வி எழுப்பப்பட்டது.

இவ்விரு யுவதிகளுக்கும் வேலை வழங்க வேண்டுமென உறுப்பினர் வி. கைலாசபிள்ளை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

மன்னார் பட்டினசபையில் 6 மாதங்கள் கடமையாற்றிய இரு யுவதிகள் திடீரென வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இதனால் மன்னார் பட்டினசபையில் இவர்கள் செய்த வேலைகள் யாவும் தேங்கிக் கிடக்கின்றன. இவ்வேலைகளைத் தொடர்ந்து செய்வதற்கு இவ்விரு யுவதிகளுக்கும் மீண்டும் நியமனம் வழங்கப்பட வேண்டும்.

திரு. சயஸ் பெல்டானோ:- எனக்கு யாரிடமும் தனிப்பட்ட குரோதம் இல்லை. இச்சபை சட்டப்படி செயற்படவேண்டும். நியமனம் வழங்கும் உரிமை நிறைவேற்றுக் குழுவுக்கே உண்டு. ஆதலால் இந்நியமனம்பற்றி நிறைவேற்றுக்குழுவே முடிவு செய்ய வேண்டும்.

ஜனப் எஸ். கே. சாகுல் ஹமீத்:- இந்த நியமனம் முன்பு எப்படி வழங்கப்பட்டது. தற்காலிகமாக வழங்கப்பட்டதா என்பது தெரியாது. ஆதலால் இந்நியமனம் பற்றிய முடிவை நிறை

(5-ம் பக்கம் பார்க்க)

சாந்தி 3வது பரபரப்பூட்டும் ஹவுஸ்புல் வாரம்
(யாழ் நகர்) தினசரி 10-30, 2-30, 6-15 & 9 45
கமல்... ஸ்ரீதேவி... குரு
நம்பியார் வெண்ணிறஆடை நிர்மலா- முத்துராமன்- சுந்தரராஜன்
தென்னகத்தில் மிகுந்த பரபரப்பூட்டிய வண்ண ஓவியம்

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
மேஜர் சுந்தரராஜன் - நாகேஷ்
ஜெயலலிதா - ஏ.வி.எம். ராஜன்
மேஜர் சந்திரகாந்த்
இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்ட
புத்தம் புதிய பிரதி

7 வது வாரம்
ஸ்ரீதர் (யாழ்நகர்) தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
மஞ்சுபார்கவி ... துளசிராம்
சங்கராபரணம் (கலர்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவகுமார்-லட்சுமி
அவன்-அவள் அது (ஈஸ்ட்மன்கலர்)

லிடோ (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
அலாவுதீனும் அற்புதவிளக்கும்

ராணி 8வது வாரம் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சுதாகர், பாக்கியராஜ், சுமதி
மற்றும் பலர் நடித்த
சுவர் இல்லாத சித்திரங்கள்

WINDSOR JAFFNA இன்று மட்டும்
Daily at 10-30 a.m., 2-00, 4-30, 7-00 & 9-30 p.m. only
"ஹன்னி கோல்டர்" தன் துப்பாக்கியுடன் புறப்படுகிறாள். தன் கணவனைக் கொன்றவர்களை பழிவாங்க.
Raquel Welch — Christopher Lee
in
"Hannie Caulder"
Adults only Scope
From 9th
Clint Eastwood in
THE OUTLAW JOSEY WALES (Color)

யாழ். மனோகரா வெண்திரையில்
★ எஸ். எஸ். ஆர். ★ விஜயகுமாரி
★ ஏ வி. எம். ராஜன் ★ நகேஷ்
மற்றும் பலர் திறம்பட நடித்த

A. V. M. தயாரிப்பு
நானும் ஒரு பெண்
தினசரி 4 காட்சிகள் 10 30, 2-30, 6 30 9 30
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட
புத்தம் புதிய பிரதி

உபந்நியாசம்

(சாவகச்சேரி)

சங்கத்தானை ஸ்ரீமீனாட்சியம்பாள் தேவஸ்தானத்தில் சைவசித்தாந்த பண்டிதர் மு. வி. மகாலிங்கம் உபந்நியாசம் செய்தார். ஆசிரியர் வி. சின்னத்துரை தலைமை வகித்தார். (க)

சிறுமி தற்கொலை

(மன்னார்)

தாயார் கண்டித்ததால் 13 வயதுச் சிறுமி நஞ்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

பெரியமடு கிராமத்தை சேர்ந்த ஐதுான் என்ற சிறுமியின் மரண விசாரணையில் மேற்கண்ட தகவல் தெரியவந்தது.

வீட்டிலிருந்த 5 ரூபாவை [illegible] சிறுமியை தாயார் கண்டித்ததாகவும், இதனால் மனமுடைந்த சிறுமி நச்சுத் திராவகம் அருந்தியதாகவும் விசாரணையில் கூறப்பட்டது. விசாரணையின்பின் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. [க]

அங்கவீனருக்கு தங்குமிடம்

(சுண்டிக்குளி)

யாழ்ப்பாணத்திலுள்ள அங்கவீனர்கள் தங்குவதற்கான மண்டபம் ஒன்று ஒழுங்குசெய்யப்பட்டு வருவதாக யாழ். சமூகசேவைப்பகுதி அத்தியட்சகர் திரு. க. சிவசோதரன் தெரிவித்தார்.

லயன்ஸ் கிளப்பின் ஆதரவில் இந்த மண்டபம் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

யாழ். நகரில் சுவீப் டிக்கெற் விற்றும் இரந்து தொழில் செய்தும் தமது வயிற்றுப் பசியை நீக்கிவரும் பல அங்கவீனர்கள் தங்க இடம் இல்லாமல் மழை, வெயில், குளிரில் கஷ்டப்படாமல் மேற்படி சமூகத்துடன் தொடர்புகொண்டு பயனடையுமாறு அவர் தெரிவித்தார். (க)

இரு யுவதிகள்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வேற்றுக் குழுவிடம் ஒப்படைப்பதே சிறந்தது.

திரு. வி. கைலாசபிள்ளை:- இப் பிரேரணையை நிறைவேற்றுக் குழுவிடம் சமர்ப்பிப்பதை நான் கொள்கையளவில் ஏற்றுக் கொள்கிறேன்.

திரு. பி. எம். செபமாலை:- இந்த நியமனங்கள் தேவையானதுதான். இருப்பினும் இப் பிரேரணை நிறைவேற்றுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும். (க)

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்- ஜமுனா
குழந்தையும் தெய்வமும்

வெஸ்லி ([illegible])
தினசரி: 2-30, 6-30
சிவாஜி-சரோஜாதேவி
பாலும் பழமும்

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
எஸ் எஸ். ஆர்- விஜயகுமாரி
நீங்காத நினைவு

REGAL ரீகல்
ஐப்பசி 12 வரையும்
தினசரி
10-30, 2-15 4-45, 7-15, 9-45
THE MAN WITH THE GOLDEN GUN
தங்க துப்பாக்கிபாவிக்கும் மனிதனுடன்
007 ஜேம்ஸ் பொண்ட்

மூளாய் ஆஸ்பத்திரிசபை புதிய தலைவர் பஞ்சலிங்கம்

(யாழ்ப்பாணம்)

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை சமாசத்தின் புதிய தலைவராக யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் கூட்டுறவு ஆணையாளரால் நியமிக்கப்பட்ட பின்னர் கடந்த வாரம் அவரது தலைமையில் கூட்டம் நடைபெற்றது

தலைவர் தமது உரையில், சென்ற ஆண்டுகளுக்கு முன் இவ் வைத்தியசாலை திறமையான உன்னத சேவையால் நல்லோரின் பாராட்டையும், மதிப்பையும் பெற்றது என்பதை நினைவூட்டி அதை மறுபடியும் நிலைநாட்ட பொது மக்கள், அங்கத்தவர்கள், கடமை புரிவோர் ஆகியோரின் ஒத்துழைப்பையும், நல் ஆசியையும் நல்குப்படி ஒரு உருக்கமான வேண்டுகோள் ஒன்றை விடுத்தார். கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. வி. நடராசா அடுத்து உரையாற்றுகையில், தலைவர் உட்பட நால்வர் ஆணையாளரால் நியமனம் செய்யப்பட்டதையும் இவர்கள் தற்போது உள்ள ஒன்பது அங்கத்தவர்களோடு சேர்ந்து இயக்குநர் சபையில் கடமை புரிவோர்கள் என்று அறிவித்து தங்கள் ஒத்துழைப்பும் ஒத்தாசையும் என்றும் கிடைக்கும் என்ற உறுதிமொழியையும் கூறினார்.

வைத்தியசாலையின் சேவையைத் துரிதப்படுத்தவும் சீரமைப்புச் செய்து திறமையாய்ச் செயல்படவும் இரண்டு உபசபைகள் தெரிவு செய்யப்பட்டது. இப்போது கடமை புரியும் இரு வைத்திய கலாநிதிகளுடன் மேலும் ஒரு திறமை வாய்ந்த வைத்திய கலாநிதி வரவிருப்பதாக அறிவிக்கப்பட்டது. வைத்தியசாலையில் பலவகையான திருத்தங்கள் செய்யவேண்டியிருப்பதால் இவைக்கு உதவ கொடை உள்ளம் படைத்த ஆதரவாளர்களும், அங்கத்தவர்களும், ஏனையோரும் முன் வருவார்கள் என்ற நம்பிக்கையை திரு. எம். எஸ். கந்தையா தெரிவித்தார். இதில் இவர்கள் பங்கு கொள்வதன் மூலம் தங்களின் அன்பான வேண்டுகோளை நிறைவேற்றி முன்போல் பல பகுதிகளிலும் இருந்து நோயாளர் வருகை தந்து மிகவும் குறைந்த செலவில் சிறந்த சிகிச்சை பெற ஏதுவாகும் என்பதையும் நினைவூட்டினார்.

இக்கூட்டத்தில் திரு. எம். எஸ். கந்தையா உபதலைவராகவும், திரு. எஸ். இராமநாதன் செயலாளராகவும், திரு. எம். பூலோகம் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். (இ)

ரயில் நிலையத்தில் நின்ற சிறுவர்கள்

(மன்னார்)

கந்தளாயைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களான இரு சகோதரர்கள் மடு ரயில் நிலையத்தில் அநாதவராக நிற்பது கண்டுபிடிக்கப்பட்டு ரயில் நிலைய அதிகாரிகளினால் முருங்கன் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவ்விரு மாணவர்களையும் மன்னார் நீதவான் திரு. மடவல முன்னிலையில் முருங்கன் பொலிசார் ஆஜர் செய்தபோது இம்மாணவர்களை மடு ரயில் நிலையத்தில் வைத்து கண்டுபிடிக்கப்பட்ட விபரத்தை மாணவர்களின் பெற்றோர்களுக்கு அறிவித்து, பெற்றோர்களை அழைத்துவருமாறு பொலிசாருக்கு மன்னார் நீதவான் உத்தரவிட்டார். (அ)

அராலியில் இன்று பரிசளிப்பு விழா

[யாழ்ப்பாணம்]

அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் இன்று காலை அதிபர் திரு. திருநீலகண்டத்தின் தலைமையில் பரிசளிப்பு விழா நடைபெறும். வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. திருநாவுக்கரசுவும் பாரியாரும் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்கின்றனர். இவ் விழாவில் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். [உ]

'இலக்கணச் சுருக்கம்' வெளியீட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

நாவலர்பெருமான் இயற்றிய இலக்கணச் சுருக்கம் நூலின் புதிய பதிப்பின் வெளியீட்டுவிழா இம்மாதம் 11ம் திகதி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் [illegible] தலைமையில் இவ்வெளியீட்டு விழா இடம்பெறும். [illegible] நூலின் முதற்பிரதியை வெளியிட்டுவைப்பார். [உ]

சரஸ்வதி பூஜை

[யாழ்ப்பாணம்]

ஆயுள்வேத வைத்தியசாலை வைத்தியர்கள் ஊழியர்களால் இன்று நண்பகல் சரஸ்வதி பூஜை கொண்டாடப்படவுள்ளது. (மா)

0 0 0

புத்தூரில்

புத்தூர் சர்வோதய சனசமூக நிலையத்தின் வாணிவிழா இன்று மாலை நடைபெறுகிறது. வழக்காடு மன்றம், நாடகம், நடனம், வில்லுப்பாட்டு ஆகியன சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெறும்.

0 0 0

வியாபாரிமூலையில்

வியாபாரிமூலை வீரபத்திரர் ஆலயத்தின் நவராத்திரி விழாவும், சித்தாந்தவிழாவும் இன்று நடைபெறுகிறது. மெய்கண்டார் ஆதீனமுதல்வர் ஸ்ரீமத் ஞானப்பிரகாச தம்பிரான் சுவாமிகளின் சிறப்புச் சொற்பொழிவும், நவராத்திரி விழாவின் மகிமைபற்றிய அறிஞர்களின் பேச்சுக்களும் இடம்பெறும்.

யாழ். ரயில் நிலையத்தில்

யாழ். புகையிரத ஊழியர்களின் வாணி விழா இன்று மாலை யாழ். ரயில் நிலையத்தில் நடைபெறுகிறது. யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கலாநிதி அ. சண்முகதாசின் சிறப்புச் சொற்பொழிவுடன் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறுகின்றன.

0 0 0

வீரசிங்கம் மண்டபத்தில்

யாழ். வெளிவாரிப் பட்டப்படிப்புகள் நிறுவனத்தின் நவராத்திரி விழா இன்று மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தமிழ் மாணவ மன்றத் தலைவர் திரு. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற கதை, கவிதை, பேச்சுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும். யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா உரையாற்றுவார்.

0 0 0

நல்லூரில்...

நல்லூர் தெற்கு கற்பக விநாயகர் மானம்பூ உற்சவம் இன்று மாலை நடைபெறவுள்ளது.

நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தின் வாணி விழா இன்று மாலை நடைபெறுகிறது. (ஓ)

"அரசு எடுக்கும் நடவடிக்கைகளால்

பதற்ற நிலைமை தணிந்து வருகிறது'

ஷின்ஹுவா செய்தி

(யாழ்ப்பாணம்)

"அவசரகால நிலைமையும் பத்திரிகைத் தணிக்கையும் இன்னமும் நீக்கப்படாதபோதிலும் இலங்கைமக்கள் மத்தியில் குறிப்பாக தமிழ் மக்கள் மத்தியில் பதற்றம் ஓரளவிற்கு தணிந்துள்ளது தேசிய முரண்பாடுகள் தற்போதைக்கு இலகுவடைந்து வருகின்றன"

மக்கள் சீனக்குடியரசின் செய்திப்பத்திரிகையான 'ஷின்ஹுவா இவ்வாறு ஒரு செய்தி அறிக்கையினை வெளியிட்டுள்ளது.

தேசிய முரண்பாடுகளைத் தீர்த்துக்கொள்ள இலங்கை அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்ற தலைப்பில வெளியிடப்பட்டுள்ள அந் நீண்ட செய்தியில் சமீபத்திய இனக்கலவரங்கள் பற்றி விபரிக்கப்பட்டுள்ளதுடன் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் அரசுக்குமிடையில் நடைபெற்று வரும் பேச்சுக்கள் பற்றியும் விளக்கப்பட்டுள்ளது. அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

சிங்களவர்களும் தமிழர்களும் இலங்கையின் பிரதான தேசிய இனங்களாவர் தேசிய இனங்களில் முன்னையவர்கள் 72 வீதமும் பின்னையார்கள் 20 வீதமும் உள்ளனர் சரித்திரரீதியாக பல்வேறு காரணங்களின் நிமித்தம் இவ்விரு இனங்களுக்கிடையிலும் மோதல்கள் ஏற்பட்டுள்ளன காலனித்துவ ஆட்சியின்போது பிரித்து ஆளும் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு இவ்விரு தேசியஇனங்களுக்கிடையிலும் காணப்பட்ட வேற்றுமைகளை ஆட்சியாளர்கள் தமது நலன்களைப் பேணுவதற்காகப் பயன்படுத்திக் கொண்டனர் இதன் தொடராக முரண்பாடுகள் ஆழமாகிவிட்டன

சுதந்திரத்திற்குப் பின் இந்த முரண்பாடுகள் மேலும் கூர்மை பெற்று 1958, 1977 ஆகிய ஆண்டுகளில் இரத்தம் சிந்தலுக்கு இட்டுச் சென்றது.

சமீபகாலத்தில் இவ்விரு இனங்களுக்கிடையிலும இணக்கமின்மை ஏற்படுவதற்கு சில புதிய விஷயங்கள் காரணிகளாய் அமைந்தன தமிழர் விடுதலைக்கூட்டணி சுதந்திர தமிழ் குடியரசு ஒன்றை நிறுவுவதற்கு வற்புறுத்துகின்றது. அதேசமயம் பல தமிழ் இளைஞர் இயக்கங்கள் ஆயுதபலத்தால் சுதந்திர நாடொன்றை உருவாக்கவேண்டும் என்று கருதுகின்றன. இவர்களின் தொடர்ச்சியான ஆத்திரமூட்டல்கள் சிங்களவர் மத்தியில் வேற்றுமைகளை அதிகப்படுத்தின. மேலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பொருளாதாரம் பெரும்பாலும் பின்தங்கியுள்ளது சமீபகாலமாக அவர்களின் பொருளாதாரம் தொடர்ந்து வீழ்ச்சியுற்றதால் தமிழ் விவசாயிகள் வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டார்கள். இதனால் சிங்களவர்கள் அதிகமாகவுள்ள அரசாங்கத்தின் மீது அவர்களுக்கு அதிருப்தி அதிகரித்தது. இந்த நிலைமையில் நாட்டில் ஒழுங்கின்மையைத் தோற்றுவிப்பதற்கு தேசிய முரண்பாடுகளை அரசஎதிர்ப்புச் சக்திகள் பயன்படுத்திக் கொண்டுவிட்டன. இந்த முரண்பாடுகளை மேலும் மோசமாக்குவதில் வெளிநாட்டு சக்திகளும் சமீப வருடங்களாகத் தம் பங்கைச் செலுத்தி வந்துள்ளன.

இருந்தபோதிலும் சமூக ஸ்திர நிலையை ஏற்படுத்த அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளை சிங்கள-தமிழ் மக்கள் பாராட்டுகிறார்கள். சரித்திர கால முரண்பாடுகளை முற்றும் முழுதாக நீக்கும் வகையில் அரசு மேலும் நடவடிக்கைகளை எடுக்கும் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

2ம், 3ம் எதிரிகள் சரணடைந்தனர்

(புலோலி)

கம்பர்மலை தங்கவேலின் கொலை வழக்கில் பிணையில் விடப்பட்டிருந்த 2ம், 3ம் எதிரிகள் நேற்று சரணடைந்தனர்,

பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் 1ம் எதிரியான நாராயணசாமி அழகேஸ்வரன், 2ம் எதிரியான கந்தையா நாராயணசாமி ஆகியோர் சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவானா மூலம் சரணடைந்தனர்.

இவ்வழக்கில் 1ம் எதிரியான கருணேஸ்வரன். பிணையில் விடப்பட்டிருந்தசமயம் மரணமடைந்துவிட்டார்.

எதிரிகள் மூவரும், யாழ். மேல்நீதிமன்றத்தின் பணிப்பின்பேரில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும், வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் ஆஜராக வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது.

கடந்த இரு ஞாயிற்றுக்கிழமைகளும், எதிரிகள் சமூகமளிக்கவில்லையென . வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டர் உடுகம்பல பருத்தித்துறை நீதவானுக்கு அறிவித்திருந்தார்.

பிணை அனுமதியை நீக்க ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கு காரணம் காட்டுமாறு நீதவான் எதிரிகளிடம் கேட்டபோது. காரணம்காட்டுவதற்கு, இம்மாதம் 20ம் தேதிவரை அவகாசம் வழங்குமாறு எதிரிகள் சார்பில் கோரப்பட்டது. இக்கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. எதிரிகள் இருவரையும், இம்மாதம் 20ம் தேதிவரை ரிமாண்டில்வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (க)

உலகத்தலைவர்கள்---

1-ம் பக்கத் தொடர்ச்சி

தியின். சதாத் கொலைசெய்யப்பட்டதை வெகுவாகக்கண்டித்திருப்பதுடன், சதாத்தின் சமாதான முயற்சிகள்தொடர்ந்தும் எகிப்தியரால் போற்றப்படவேண்டுமென்னுர்

சதாத் இல்லாத உலகம் அமைதியற்றதாக விருக்கும். என்று பிரிட்டிஷ் அரசு சதாத்தின் மறைவு குறித்து வெளியிட்ட அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி சதாத்தின் படுகொலை கோழைத்தனமான செயலென்றும், அதனை உலக தலைவர்கள் கண்டனம் செய்ய வேண்டும் என்றும் ஐ. நா. சபையின் பொதுச்செயலாளர் தெரிவித்துஅனார்.

நவமலர்---

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கக் கடமைபூண்ட கல்விக்கூடங்களின் பணி மகத்தானது. ஒருநாட்டின் பெருமையையும், செல்வத்தையும் படைத்துக்காக்கும் எதிர்காலச் சந்ததியினரை வளர்க்கும் "பூங்கா' பாடசாலைகள் இந்த வகையில் அரும்தொண்டாற்றி வரும் யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர்கள், மாணுக்கர்கள் வருடந்தோறும் எடுத்துவரும் வாணி விழா வழமைபோல இன்றும் சிறப்பாக நடக்கிறது. கடந்த ஆண்டு தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ள "நவமலர்" வெளியீடு இவ்வாண்டும் நிகழ்கிறது. நவமான தத்துவக் கருத்துக்களைக் கொண்ட கட்டுரைகள் இடம்பெற மலரும் "நவமலர்" நிறைபயன் தரும்.

யாழ். இந்துக்கல்லூரியின் கலை, சமயத் தொண்டுகளில் முழுமையும் ஈடுபட்டு ஸ்தாபகர்களின் புனிதமான நோக்கங்களை பேணிவரும் இந்து இளைஞர் கழகம் ஆற்றிவரும் தொண்டு இது என்பது குறிப்பிடத்தக்கது.

சிவ. தவவிநாயகன்
தலைவர்
யா. இ. கல்லூரி இந்து
இளைஞர் கழகம்)

உலக...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

லியனவற்றின் ஆதரவினையும் ஒத்துழைப்பினையும் பெற்ற லயன்ஸ்கழகங்கள் இச்சேவை தினத்தினை விமரிசையாக கொண்டாடுகின்றன

பல்வேறு பிரச்சினைகள் சூழ்ந்திருக்கும் இக்காலகட்டத்தில் வாழ்க்கைச் செலவு கட்டுப்பாட்டுக்கு அப்பால் இருக்கும் இந்நேரத்தில் தமது நேரம், பணம், முதலியவற்றை சமூகத்தின் நலனுக்காக செலவழித்து சேவையாற்ற முன்வந்துள்ள லயன்ஸ் கழகங்களுக்கும் கழக அங்கத்தவர்களுக்கும் பொது மக்கள் என்றும் கடமைப்பட்டவர்களாவர். அவர்களின் சேவை மனப்பான்மையை ஊக்குவிக்க அவர்களுக்கு ஆக வேண்டிய ஆக்கபூர்வமான உதவிகள் அனைத்தையும் செய்வது பொதுமக்கள் கடமையாகும்.

சேவை செய்வது ஒருசிலருக்கு மட்டும் என நிர்ணயிக்கப்பட்டதல்ல. உலகத்தில் பிறந்த ஒவ்வொருவரும் தமது சேவையை சமூகத்திற்குச் செய்ய கடமைப்பட்டுள்ளனர் பூமாதேவியில் தாம் இருக்கும் இடத்திற்கு பிரதியுபகாரமாக "சேவை" என்ற முறையில் செயல்படுதல் அவசியமாகும். பணம் உள்ளவர் பணத்தையும், ஏனையோர் தத்தம் வல்லமைக்கேற்ப ஆக்கபூர்வமான உதவிகளையும் ஆதரவையும் வழங்க வேண்டும்.

உலக லயன்ஸ்கழக சேவை தினமாகிய இத்தினத்தில் உலகத்தின் பல்வேறு பாகங்களில் இருக்கும் பதின்மூன்று லட்சம் லயன்ஸ் அங்கத்தவர்கள் சேவையில் ஈடுபடும் இத்தினத்தில் அவர்களுக்கு தமது ஒத்துழைப்பினை வழங்க பொது மக்கள் தீர்மானித்து இத்தினத்தின் நோக்கத்தினை நிறைவேற்றுவார்களாக.

இன்று

(காரைநகர்)

காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாலயத்தில் வாணிவிழா இன்று சிறப்பாக நடைபெறும்.

வித்தியாலய முன்னுள் அதிபர் அமரர் மு. கார்த்திகேசு தலைவர்களின் உருவப்படத்தை யாழ். இந்துக் கல்லூரி முன்னுள் அதிபர் திரு. என். சபாரத்தினம் இன்று காலை திரைநீக்கம் செய்துவைப்பார்.

அவசரகாலச் சட்டம்

(கொழும்பு)

தற்போது அமுலிலுள்ள அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது பற்றி ஆராய்வதற்காக இம்மாதம் 21ம் திகதி பாராளுமன்றம் விசேடமாகக் கூடுகிறது.

இம்மாதம் 16ம் திகதியுடன் காலாவதியாகும் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது குறித்து ஆராயும் பொருட்டு 21ம்திகதி 2மணித்தியாலங்களுக்கு கூடுவதென நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

வழிப்பறி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தம்தாங்கிய கோஷ்டியினரால் வழிப்பறிசெய்யப்பட்டுள்ளது.

ஆயுதம்தாங்கிய 5 பேர் கொண்ட கோஷ்டி அனுராதபுரத்துக்கு அண்மையிலுள்ள தொரசியாகமவில் வைத்து காரை மறித்து பொருள்களைக் கொள்ளையடித்துள்ளனர். பொருள்களைப் பறிகொடுத்த இருவரும் அனுராதபுரம் பொலிஸ்நிலையத்தில் புகார் தெரிவித்தும் எதுவித பலனும் கிடைக்காததைத் தொடர்ந்து வெறும்கையுடன் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளனர்.

இவர்கள் இருவரும் வெளிநாட்டில் வேலைபார்த்துவிட்டு கொழும்புக்கு வந்து கார் ஒன்றை வாடகைக்கமர்த்தி யாழ் வரும் வழியிலேயே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

(மா)

அரபு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனுப் நாஸரின் மறைவுச் செய்தி கேட்டு துடிதுடித்த எகிப்திய மக்கள் ஜனுப் சாதாத்தின் மறைவுச் செய்தியை மிகவும் அமைதியுடன் ஏற்றுக்கொண்டனர் என அறிவிக்கப்பட்டது.

மகாராணி---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இம்மாதம் 23ம், 24ம்திகதிகளில் கண்டிக்கு வருகைதரும் மகாராணியும். பிரமுகர்களும் பேராதனை பூங்காவுக்கும் விஜயம் செய்வார்கள். இதனையொட்டி கண்டியிலிருந்து பேராதனை செல்லும் பாதை பாலங்கள் சீரமைக்கும் வேலை இரவ பகலாக நடைபெற்று வருகின்றது.

பணம்? பணம்?? பணம்???

நீங்கள் இறக்குமதி செய்துள்ள பொருட்கள்
தேங்கி நிற்கின்றனவா?
உங்களுக்கு வியாபாரத்திற்கு பணம் தேவையா?
உங்கள் குறைகளை தீர்க்க நாங்களிருக்கின்றோம்
வந்து சந்திக்கவும்

விற்பனை முகாமையாளர்,
தபினன்ஸ் கம்பனி
லிமிட்டெட்,
249 சி, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி; 7680

மரண அறிவித்தல்
சமத்தர் செல்லத்துரை
ஒட்டகப்புலம். யாழ்ப்பாணம்
(பிரபல முறிவு நோவு வைத்தியர்)

சமத்தர் செல்லத்துரை காலமானர். இவர் காலஞ்சென்ற இராசமணி பொன்னம்மாவின் அன்புக்கணவராவார்.

சமக்கிரியை வெள்ளிக்கிழமை 9-10-81 மாலை நாலு மணிக்கு நடைபெறும்.

ஒட்டகப்புலம், வசாவிளான்.
1176

இப்பத்திரிகையாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிடெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி 808ம் இலக்கத்திலுள்ள கலாநிலை அச்சகத்தில் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் 8-ம் திகதி அச்சிடப்பெற்று வெளியிடப்பெற்றது. Registered as a News Paper The General Post office: Sri Lanka. Regd. Q. B. 100236/81, P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707. 889. 8186.